ஸ்ரீ ராமஜெயம்

# ஷோபக்ருது வர்ஷ பலன்

மணப்பாக்கம் ஈயுண்ணி ஸ்ரீ கேசவன் (ராஜப்பா) ஐயங்கார்

பிரபவாதி 60 வருடங்களில் 37வது வருடமான ஷோபகருத் வருஷம் சித்திரை 1ம் தேதி வெள்ளிக்கிழமை 19:54 நாழிகைக்கு (1400) பிறக்கிறது.

ஷோபகருத் வர்ஷ தேவதையின் த்யான ஸ்லோகம்

**सहोजसम् शोभकृतम् न्रुणामिष्ठ तमाश्रये।**
**शिबिकावाहनारूढम्  वामरद्विभुपाणिकम् ।।**

**ஸஹோஜசம் ஷோபக்ருதம் நருணாமிஷ்ட தமாஸ்ரயே ।**
**சிபிகாவாஹநாருடம் வாமரத்விபுபாணிகம் ||**

பொருள்: **<u>அத அக்னே: அஷ்ட புருஷ:</u>** என்கிற வாக்கியத்திற்கேற்ப, ஸஹோஜசு என்கிற அக்னியான நான் மனிதர்களுடைய இஷ்டத்தை பூர்தி செய்து, பொலிவு செய்ய பல்லக்கை விட்டு இறங்கி இரு கைகளால் அனுக்ரஹிக்கிறேன்.

## வெண்பா

ஷோபக்ருத் தன்னிற் றெல்லுல கெல்லாஞ் செழிக்கும் கோபமகன்று குணம் பெருகும் சோபணங்கள் உண்டாகு
மாரியொழியாமற்பெய்யுமெல்லாம் உண்டாகுமென்றேயுரை.

பொருள்:இவ்வருடம் கோபம் இல்லாமல் நல்ல குணம் அதிகரிக்கும் சுபங்கள் உண்டாகும்,மழை இல்லாமலின்றி உலகமெல்லாம் செழிக்கும்

பரிகாரம்: இறை நம்பிக்கை அதிகரிக்க வேண்டும். நம்பிக்கை அதிகரிக்க, இறை தொழல் அதிகரிக்க வேண்டும். தொழல் அதிகரிக்க, இறை பணி அதிகரிக்க வேண்டும். பணி அதிகரிக்க, ஆலயம் செழிக்க வேண்டும்.

சுபம்.

ஸ்ரீ:
ஸ்ரீராம ஜயம்

"ஸத்யம் ஸத்யம் புனஸ் ஸத்யம் உத்ருத்ய புஜம் உச்யதே |
வேதாத் சாஸ்த்ரம் பரம் நாஸ்தி, ந தைவம் கேசவாத் பரம்||

## "ஸ்ரீ ஆதிகேசவ தசகம்"

ஆதிகேசவம் வந்தே க்ஷீர நதீதீர வாஸினம் | 1
ஸ்ரீபூமி தேவீ ஸமேதம் ஸுகந்தபுர நாயகம் ||
லோகத்ரய விக்ராந்தம் கயாது ஸுத ஸம்ரக்ஷகம் | 2
க்ஷீரார்ணவ மந்தானம் ச்ரயாமி ஸ்ரீஆதேகேசவம் ||
உத்ஸ்ருஜ்ய நாக பர்யங்கம் ஆகதம் ஸுகந்தபுரீம் இமாம் | 3
கஜேந்த்ரரக்ஷகம் வந்தே தேவதேவம் பங்கஜலோசனம் ||
வந்தே கீதோபதேஷ்டாரம் பார்த்தஸ்யந்தனபூஷணம் | 4
விதுஷா ராகவார்யேண பூஜிதம் ஆதிகேசவம் ||
வந்தே ஸுகந்த புராதீசம் ஜலநிதௌ ஸேதுபந்தினம் | 5
நிகமாந்தை: ம்ருக்யமாணம் த்ருவஸ்ய உத்தம ஸ்தான ப்ரதம் ||
ஸமஸ்த ப்ராணி ஸந்த்ராண ப்ரவீண! கருணாகர! | 6
விலஸந்து கடாக்ஷாஸ்தே மய்யஸ்மின் ஜகதாம்பதே ||
அகாரிணம் ச க்ருத்யானாம் அக்ருத்யானாம் ச காரிணம் | 7
பாபீயாம்ஸம் அமர்யாதம் பாஹி மாம் ஆதே கேசவ! ||
நித்யம் நிரபராதேஷு கைங்கர்யேஷு நியுங்க்ஷ்வமாம் | 8
பரிமளபுராதீச! ரக்ஷமாம் சரணாகதம் ||
மங்களம் ஆதிகேசவாய க்ஷீரநதீ தீரவாஸினே! | 9
பத்மா தரணி ஸமேதாய ஸார்வபௌமாயாஸ்து மங்களம் |
பாதுகாதாஸ பாஷ்யேன டீ, ஆர் (D.R) பாதாப்ஜ ரேணுனா | 10
ப்ரணீதம் ஸ்தவம் யோ வக்தி அஷ்டைச்வர்யம் லபேதஸ: ||

"ஸர்வம் ஸ்ரீகிருஷ்ஙணார்ப்பணம் அஸ்து!"
"ஸர்வம் ஸ்ரீபாதுகார்ப்பணம் அஸ்து |"
"பகவான் ப்ரீயதாம் ஸ்ரீ ஆதிகேசவ: |"

★★★

## "ஸ்ரீ ஆதிகேசவ ஸு ப்ரபாதம்"

கௌஸல்யா ஸுப்ரஜா:! ராம! பூர்வா ஸந்த்யா ப்ரவர்த்ததே |
உத்திஷ்ட்ட நரசார்தூல! கர்த்தவ்யம் தைவம் ஆன்ஹிகம் || 1

உத்திஷ்ட்ட ஆதிகேசவ! உத்திஷ்ட்ட கருடத்வஜ! |
உத்திஷ்ட்ட கமலா காந்த! த்ரைலோக்யம் மங்களம் குரு || 2

மாதஸ் ஸமஸ்த ஜகதாம் ஸரஸீருஹாக்ஷே! |
லோகவிக்ராந்த தயிதே தவ ஸுப்ரபாதம் || 3

பூர்வாம் திசம் ரவிருபைதி விமுஞ்ச நித்ராம் |
உத்திஷ்ட்ட ஸாகரஸுதே தவ ஸுப்ரபாதம் || 4

ஸ்வாமின்! ஜகத்ரய விபோ! கமலாஸஹாய |
ஆதிகேசவ பகவன்! தவ ஸுப்ரபாதம் || 5

த்வாம் கோடிஸூர்ய ஸத்ருசம் ஸரஸீருஹாக்ஷம்
ஸம்ஸேவிதும் ரவிருபைதி பியா நிலீன: |
பூர்வாம் திசம் நிஜஸஹஸ்ர கராஞ்சலிஸ்ஸன்
ஆதிகேசவ! பகவன்! தவ ஸுப்ரபாதம் || 6

ஸ்ரீரங்க லக்ஷ்மணமுனி: மதுரை: வசோபி:
ராமாவதா சரிதம் படிதும் ப்ரவ்ருத்த: |
பத்தாஞ்ஜலிஸ்ஸன் வஸதி வாஸக்ருஹாங்கணே/தே
ஸ்வாமின் ! க்ருபாஜலநிதே! தவ ஸுப்ரபாதம் || 7

வைதானிகா: தவ சுபம் சரிதம் விசித்ர–
பத்ய ப்ரபந்த நிவஹை: மதுரம் ஸ்துவந்தி |
கன்யா வ்ரஜந்தி கர பல்லவ க்லுப்த மால்யா:
ஆதிகேசவ! பகவன்! தவ ஸுப்ரபாதம் || 8

★ ★ ★

ஸ்ரீ பாதுகாஸேவக பாலி (லேட்) A.P. **பாஷ்யம் ஐயங்கார்,** P.V. களத்தூர்
அவர்கள் எழுதியது

பாஸ்வான் விகாசயதி பங்கஜகுட்மலானி
நிருத்யந்தி பக்ஷவலயை: முதிதா: மயூரா: |
கூஜந்தி குஞ்ஜநிவஹோ சுக ஸாரிகாத்யா:
பத்மா ஸஹாய! பகவன்! தவ ஸுப்ரபாதம் || 9

ஸங்க்லுப்த சாமரயுகம் சசலாஞ்சனாபம்
கும்பத்வயம் குஸும பல்லவ வஸ்த்ர ஜுஷ்டம் |
ஸௌவர்ண தர்ப்பண வரம் ச ஸமர்ப்பிதம் தே
கருணா ஸாகர விபோ! தவ ஸுப்ரபாதம் || 10

இத்தம் த்வதீய குண ஸிந்து ஸுதாநிமக்ன—
ஸ்ரீவாஸபுத்ர ரசிரம் தவ ஸுப்ரபாதம் ||
யே வா மனுஷ்த்வ வரா: ப்ரவதந்தி பக்த்யா
பரிமளபுரநாதோ வரதோऽஸ்து தேஷாம் || 11

## ஸ்ரீ ஆதிகேசவ ப்ரபத்தி:!

ப்ரபத்யே ஆதிபுருஷம் ஸுகந்த புரநாயகம் |
பத்மாதரணி ஸமேதம் கேசவம் கருணாலயம் || 1

லோகத்ய விக்ராந்தம் ப்ரபத்யே ஸ்ரீஆதி கேசவம் |
ஸ்ரீ பூமி தேவ்யா ஸமேதம் பார்த்த ஸ்யந்தன பூஷணம் || 2

கீதாம்ருத தோக்தாரம் பரிமளபுர நாயகம் |
கேசவம் ஆதிபுருஷம் ப்ரபத்யே கருணாகரம் || 3

கேசவம் ஆதிபுருஷம் க்ஷீரநத்யாஸ்தீரேஸ்திதம் |
ப்ரபத்யே தீரபுருஷம் ஸமுத்ரே ஸேதுபந்தினம் || 4

கேசவம் ஆதிபுருஷம் த்ரௌபதீமான ரக்ஷகம் |
ப்ரபத்யே பத்மா ரமணம் தானவ சிசு ரக்ஷகம் || 5

## "ஸ்ரீ ஆதிகேசவ மங்களம்!"

மங்களம் ஆதிதேவாய ஸ்ரீபூமீ ஸமேதாய ச |
ஸுகந்த புரநாதாய கேசவாயாஸ்து மங்களம் || 1

ராகவார்யேண ஸேவ்யாய ஆமோத புரவாஸினே |
க்ஷீரார்ணவ நிவாஸாய கேசவாயாஸ்து மங்களம் || 2

கோபீஜனவல்லபாய கருணா ஸாகராய ச |
வேத வேதாந்த வேத்யாய கேசவாயாஸ்து மங்களம் || 3

க்ஷீரார்ணவாத் ஆகதாய சபர்யா பூஜிதேந ச |
ஸுகந்த புரவாஸாய கே ச வாயாஸ்து மங்களம் || 4

கோழியாலம் ஸ்வாமீதி க்யாதேன ஸ்ரீரங்கலக்ஷ்மணனே ச |
கேசவாய ஆதிபுருஷாய பூஜிதாயாஸ்து மங்களம் || 5

மங்களா சாஸனபரை : ஸதாசார்யபுராகமை: |
ஸர்வைஸ் ச பூர்வை: ஆசார்யை: ஸத்க்ருதா யாஸ்து மங்களம் ||6

பாதுகா தாஸ பாஷ்யேன (D.R.) டீ.ஆர். பாதாப்ஜரேணுனா
ப்ரணிதம் ஸ்தவம் யோ வக்தி அஷ்டைச்வர்யம் லபேத ஸ:|| 7

பகவான் ஸ்ரீ ஆதிகேசவ: இமானி ஸ்தோத்ராணி,
அநேந பாதுகாஸேவக பாஷ்ய தாஸேன,
ஸ்வஸ்மை ஸ்வப்ரீதயே ஸ்வயமேவ காரிதவான்:

*This "small Sthothra" has been composed and written by that every Lord Sri Adhikesava Himself, through this humble-self, for His delecation.*

"ஸர்வம் ஸ்ரீக்ருஷ்ணார்ப்பணம் அஸ்து |"
"ஸர்வம் ஸ்ரீபாதுகார்ப்பணம் அஸ்து |"
"ஸர்வேஜனா: ஸுகினோ பவந்து |"
"ஸமஸ்த மங்களானி ஸந்து|"

★ ★ ★

ஸ்ரீ பாதுகாஸேவக பாலி (லேட்) A.P. **பாஷ்யம் ஐயங்கார்,** P.V. களத்தூர் அவர்கள் எழுதியது

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

## முன்னுரை

இந்துமதம் வைதிகமானது; வேதத்தைப் பின்பற்றுவது; இந்த மதத்தைச் சேர்ந்தவர்கள், நெற்றியில் அடையாளம் ஏதாவது இடவேண்டும். வைஷ்ணவர்களான நாம் திருமண் இட்டுகொள்கிறோம். திருமண் என்பது என்ன? எந்தப் பொருளைக் கொண்டுத் திருமண் இடவேண்டும்? ஏன் இட வேண்டும்? எதற்காக? (என்ன பலன்?) எப்படி இடவேண்டும்? என்ன மந்த்ரம் சொல்லி இட வேண்டும்? எத்தனை இடத்தில் திருமண் இட வேண்டும்? - முதலிய எல்லா விஷயங்களையும் தொகுத்து, ஸ்வாமி தேஸிகன் சாதித்துள்ளார். ஸச்சரித்ர-ரக்ஷா நூலில் இரண்டாவது அதிகாரம் ஊர்த்வபுண்ட்ர தாரணாதிகாரம். அதில்தான் இந்த எல்லா விஷயங்களையும் சாதித்துள்ளார்.

ஸ்வாமி தேஸிகன் சொல்லாமல் விட்ட விஷயமே இதில் கிடையாது. திருமண் இடுவது பற்றிய எல்லா விஷயங்களும் இதில் உள்ளன. எந்த அமைப்பில் திருமண் இடவேண்டும்? நீளம் என்ன? அகலம் என்ன? உட்பட எல்லாவற்றையும் அளந்து கொடுத்தருளியுள்ளார்.

கடைசியில் ஸ்வாமி தேஸிகனே ஸாதித்த ஒரு ஶ்லோகம்-

**श्रीमद्वेङ्कटनाथेन श्रुतिस्मृतिशतैरिति ।**
**विधानमूर्ध्वपुण्ड्रस्य विस्तरेण निरूपितम् ।।**

(பல நூற்றுக்கணக்கான வேத வாக்யங்களையும் ஸ்ம்ருதி வசநங்களையும் ஆதாரமாகக் கொண்டு, திருவேங்கடமுடையான் (அல்லது) வேதாந்த தேஸிகனால், உயரத் திருமண் இடுவதானது விரிவாக நிரூபணம் செய்யப்பட்டது.)

ஸ்வாமி, இங்கு எடுத்துக்காட்டியிருக்கும் ப்ரமாண வசநங்களைப் (மேற்கோள்களைப்) பார்த்தாலே ப்ரமிப்பாக இருக்கிறது.

வேத நூல்கள் - 5

புராண, ஸ்ம்ருதி நூல்கள் - 19

பாஞ்சராத்ர ஆகம நூல்கள் - 9

தர்ம ஶாஸ்த்ர மஹர்ஷிகள் - 7

மற்றும் ஆழ்வார், ஆழ்வான், பிள்ளான், அம்மாள் முதலிய நம் ஆசார்யர்களின் நூல்கள்;

இவற்றையெல்லாம் அலசி ஆராய்ந்து, பல ஆயிரக்கணக்கான வசநங்களைக் கொண்டு முறைப்படி முடிவு செய்த விஷயத்தை நமக்கு இங்கு அருளியுள்ளார். நமக்காக, இங்கே எடுத்துக் காட்டியுள்ள ப்ரமாண வசநங்கள் (மேற்கோள்கள்) மட்டும்-290.

இதையெல்லாம் எதற்காக எழுதுகிறேன்?

ஸ்வாமி தேஸிகன், நமக்காகப் பட்ட ஶ்ரமம் பற்றி நினைத்துப் பார்க்கிறேன்; அவரது தயையை எண்ணி வியக்கிறேன்.

இதற்கு மேல் ஒருவர், புதியதாக, திருமண் விஷயத்தில் ஏதாவது ஆராய்ச்சி செய்தால், அவர் பரிஹாஸத்துக்குரியவர்! பரிதாபத்துக்கு உரியவர்கூட! ஐயோ பாவம்! இத்தனை நூல்களில் ஒன்றைக்கூட நம்மால் உருப்படியாய் ஆராய முடியாது என்பதை உணர்ந்தும், ஆசார்ய வள்ளல் ஸாதித்ததை ஏற்க முடியாமல் இருக்கும் நிலை அவருக்கு! ஆசார்யரின் கருணையைப் பெறமுடியாத பரிதவிப்பு!

ஆனால், நம் வைஷ்ணவ குலத்தின் பாக்யமாய் அவதரித்த ஸ்வாமி தேஸிகனின் கருணையால், நாம் இந்த விஷயத்தை இப்போது பார்க்கிறோம். நமக்கு முதலில் இரண்டு உறுதிமொழி தேவை:-

i) ஸ்வாமி தேஸிகன் சாதித்ததை, முடிந்தவரை கடைபிடிப்போம்.

ii) இந்தத் திருமண்காப்பு குறித்துப் புதியதாக யாராவது ஏதாவது சொன்னால், அதைப்பற்றித் துளியும் கவலையே படாமல் ஒதுக்கி விடுவோம்.

## ஆசார்ய பரம்பரை பாசுரம்

என் உயிர் தந்தளித்தவரைச் சரணம் புக்க
யான் அடைவே அவர்குருக்கள் நிரை வணங்கி
பின் அருளால் பெரும்பூதூர் வந்த வள்ளல்
பெரிய நம்பி ஆளவந்தார் மணக்கால் நம்பி
நன்னெறியை அவர்க்கு உரைத்த உய்யக் கொண்டார்
நாதமுனி சடகோபன் சேனை நாதன்.
இன் அமுதத் திருமகள் என்று இவரை முன்னிட்டு
எம்பெருமான் திருவடிகள் அடைகின்றேனே.

## பன்னிரு திருநாமங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | கேசவாய நம : | – | நெற்றி |
| 2. | நாராயணாய நம : | – | நடு வயிறு |
| 3. | மாதவாய நம : | – | மார்பு |
| 4. | கோவிந்தாய நம : | – | கழுத்து |
| 5. | விஷ்ணவே நம : | – | வலது வயிறு |
| 6. | மதுசூதனாய நம : | – | வலது கை |
| 7. | த்ரிவிக்ரமாய நம : | – | வலது கழுத்து |
| 8. | வாமனாய நம : | – | இடது வயிறு |
| 9. | ஸ்ரீதராய நம : | – | இடது கை |
| 10. | ஹ்ருஷீகேசாய நம : | – | இடது கழுத்து |
| 11. | பத்மநாபாய நம : | – | முதுகின் அடி |
| 12. | தாமோதரபய நம : | – | பிடறி |

## பன்னிரு திருமண் ஸ்ரீசூரண மந்த்ரங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | நெற்றி | – | ச்ரியை நம : |
| 2. | வயிற்றின் மத்தியில் | – | அம்ருதோத்பவாயை நம : |
| 3. | மார்பில் | – | கமலாயை நம : |
| 4. | கழுத்தின் மத்தியில் | – | சந்திர சோதர்யை நம : |
| 5. | வயிற்றின் வலது | – | விஷ்ணு பத்ன்யை நம : |
| 6. | வலது புஜம் | – | வைஷ்ணவ்யை நம : |
| 7. | வலது கழுத்து | – | வராரோஹாயை நம : |
| 8. | வயிற்றின் இடது | – | ஹரிவல்லபாயை நம : |
| 9. | இடது புஜம் | – | சார்ங்கிண்யை நம : |
| 10. | இடது கழுத்து | – | தேவதேவிகாயை நம : |
| 11. | பின்புறம் இடுப்பு மேல் | – | சுரசுந்தர்யை நம : |
| 12. | கழுத்தின் பின் | – | மகாலக்ஷ்ம்யை நம |

மீதமுள்ள திருமண்ணை குழைத்து தலையில் வாசுதேவாய நம : என்றும் ஸர்வாபீஷ்ட பலப்ரதாயை நம : ஸ்ரீசூர்ணத்தையும் இட வேண்டும்.

# ஸ்ரீசது:ஸ்லோகீ

(ஸ்ரீ.உ.ப. வித்வான் வில்லிவலம் நாராயணசார்ய ஸ்வாமி, வாராணஸீ)

(இது ஸ்ரீ ஆளவந்தார் (யாமுனாசார்ர்) அருளியது. நான்கு ஸ்லோகங்கள் உடையதனால் இந்தப் பெயர் வந்தது; பெரிய பிராட்டியார் விஷயமானது. பிற்காலத்தில் புறப்பட்ட பிராட்டியின் ஸ்துதிகளுக்கெல்லாம் ஆதிவித்து இதுவே, ஆகவே, அதிஸங்க்ஷிப்தமானது. இதன் கருத்தை இங்கே தருகிறோம்)

**1.** (காந்தஸ் தே புருஷோத்தம : ............) அம்மா! உன் கணவனோ புருஷோத்தமனாகிறான். அரவரசன் உனக்கப் புல்கும் அணையும் ஆஸனமும் ஆகியுள்ளான். வேதாத்மாவான வைநதேயன் வாஹன வடிவு கொண்டான். உலகம் முழுவதையும் கவர்ந்திழுக்கும் இயற்கை ப்ரக்ருதி உனக்குத் தொங்கும் திரை. தேவர்களும் அவர் தேவிமாரும் உன்னிடம் பணிபுரியும் ஸேவகர்களம் ஸேவிகைகளுமாக கநிற்கின்றனர். உன் திருநாமம்—மிகப் பெரிய—சுருக்கமான 'ஸ்ரீ' என்னும் ஒற்றைஎழுத்தேயாகும். இவ்விதமாக உள்ள ஸர்வேச்வரியான உன்னை என் சொல்லுவேன்? எப்படிச் சொல்லுவேன்?

**2.** (யஸ்யாஸ்தே மஹிமாநம்...) ஸர்வலோகேச்வரி! உன் கணவன் எல்லாம் வல்ல இறைவனேயாகிலும், உன் பெருமைகளைத் தன் பெருமைகளைப் போலவே, அறியமாட்டான். இவ்வளவென்று திட்டமாக, அவை இயல்பாகவே அநுகூலமாக நன்கு அமைந்து எல்லையைக் கடந்து நிற்கின்றன அல்லவா? அப்படிப்பட்ட உன்னை ஹே லோகநாதனின் நாயகியே! உன் அடியன் என்றும், உன் அடியை அடைந்தவன் என்றும் ஒருவாறு உள்ளத்தில் பயங்கெட்டு, உன் அருள் நம்பித் துதிக்க ஆரம்பிக்கிறேன்.

**3.** (ஈஷத் த்வத்கருணா....) தாயே! உன் சிறிய அரள்பார்வையும் போதும். அது இல்லாமையினாலன்றோ உலகம் முன்பு பிரளய காலத்தில் உலர்ந்து ஒழீந்தது? மீண்டும் இப்போது அது பெற்றுப் பிறந்து பலவாறு படருகிறது. அரவிந்தலோசனன் மனமுவக்கும் மஹிஷியான உன் அநுக்ரஹமனி;றி, உலகில் இங்கோ மேலுகில் அங்கோ, இப்போதோ எப்போதோ, மனிதர்களுக்கு ஏதும் மகிழ்ச்சி உண்டாகாது. அன்றோ?

**4.** (ஶாந்தாநந்தமஹாவிபூதி....) மஹாலக்ஷ்மி! சாந்தமாய், அநந்தமாய், ஆனந்தமாய் உள்ள மஹாவிபூதி என்னும் பகவானின் ஸ்வரூபத்திலும், அதனினும் அவனுக்கு மிகவும் பிடித்தமான மூர்த்த ப்ரஹ்மம் என்னும் அவனுடைய அத்புதத் திருவுருவத்திலும், மற்றும் அவன் தன் ஸங்கல்பத்தினால் பலவாறாக அவ்வப்போது நீ உன் இச்சைப்படி எடுத்துக்கொண்ட, அவ்வவற்றுக்கு ஏற்றஅமைப்பு, குணங்கள், பெருமை முதலியன உடைய உன் ஸ்வரூப ரூபாதிகள் கலந்து நிற்கின்றன.

# பூ ஸூக்தம்

ஏ பூமிப்பிராட்டியே, பரப்பினால் மிக விசாலமானவளாயும், எல்லோராலும் விரும்பப்படும்படி மிக ஜ்வலிப்பவளாயும், மஹிமையாலே மிக உயர்ந்தவளாயும் இருக்கிறாய். யாராலும் துண்டிக்க முடியாத நிலத்தேவியே! அன்னம் முதலியன உண்டாக்குவதன் பொருட்டு ஹவிஸ்ஸை புஜிக்கவல்ல அக்நியை உன் மத்தியில் ஆதாநம் செய்கிறேன்.

ஜ்வலிக்கும் கிரணங்களையுடைய ஸூர்யன் நம் பக்கம் வந்து தாய்போல் உணவளித்து ரக்ஷிக்கும் நிலத்தாயையும், உயரச் சென்று தந்தைபோல் மழை முதலியவற்றால் போஷிக்கும் வானுலகையும் (தம் கிரணங்களால்) வியாபிக்கிறார்.

ஸூர்யனுடைய ஸஞ்சாரத்தால், முப்பது நழிகை ஒளியுடன் உலகம் பிரகாசிக்கிறது. எனது துதிரூபமான வாக்கு வானில் பறந்துசெல்லும் இவரை சென்று கிட்டுமாக, ஏ ஸூர்யனே! எனது குற்றம் குறைகளை உமது ஒளிகளால் தேவரீர் களைந்தெறிந்துவிடுவீராக. உம் ஜ்வாலை மூலமாக நானளிக்கும் ஹவிஸை எடுத்துக் கொள்வீராக.

இவருடைய ஒளி காலையிலிருந்து மாலைவரை பூமிக்கும் வானத்திற்கும் இடையில் பரவுகிறது. இவர் ஸ்வர்க்கம் எனும் திருநாட்டை அன்பர்களுக்குக் காட்டுகிறார்.

ஸூர்யனே! ஏழ்மை காரணமாகக் கோபத்தால் உம்மை ஆராதிக்காமலிருந்திருப்பேன். (இனி) நீர் மகிழும் வண்ணம் உம்மை யாம் துதிப்போம். எங்கள் பூஜையை எனக்கு செய்யப்பட்டதாக ஏற்றுக்கொள்வீராக.

கோபத்தால் யான் தரையில் எறிந்து மண்ணோடு மண்ணாக ஆன – அதாவது மறைந்துபோன எனது பகவத் பக்தியை வஸூருத்ர ஆதித்யர்களும், விச்வேதேவர்களம் திருப்பிக் கொணர்ந்து என்னிடம் சேர்ப்பிப்பார்களாக.

# நீளா ஸூக்தம்

உலகைப் படைத்தருளும் பெருமாளே! நானிருக்கும் இந்த திசையெல்லாம், நெய், பால் முதலிய ஸம்ருத்தியையும் பந்துமித்ராதி பஹூஜனங்களைக் காக்கவல்ல ஆற்றலையும் உடையதாக ஆகி ப்ரீதியை அளிப்பதாக இருக்க வேண்டும். இந்த உலகிற்கு ஸஹிக்கும் பலத்தையும், மனோவலிமையையும் தருகிறவளும் எஜமானியுமாக இருக்கும் விஷ்ணு பத்னியான ஸ்ரீ பூமிப்பிராட்டி என்னால் பூஜிக்கப் பட்டவளாய் இத்திசையில் உள்ளோர் விஷயத்தில் அநுக்ரஹ ஸங்கல்பம் புரிந்து நிலைத்து இருப்பாராக.

ப்ருஹஸ்பதியும், ஸ்திரமான ஸமான வாயுவும் உலகை ஆட்டுவிக்கும் மாதரிச்வா எனும் காற்றும், மற்றப்ராணாதி வாயுக்களும் எமக்கு ஹிதத்தையே சொல்லக் கடவன. ஸ்வரக்கத்தினைத் தாங்குவதும் பூமிக்கு ஆதாரமாகவும் உள்ள பூமிப்பிராட்டி, பெருமாளின் தர்மபத்நீ., இந்த உலகிற்கு ஸ்வாமினியுமாவாள்.

# ஸ்ரீ ஸ்வாமி தேசிகள் அருளிச் செய்த வைராக்³ய பஞ்சகம்

மணப்பாக்கம் ஈயுண்ணி ஸ்ரீ கேசவன் (ராஜப்பா) ஐயங்கார்

## ஆசையை துறப்பதே வைராக்கியமாகும்

வறுமையில் இருக்கும் ஸ்வாமி தேசிகனுக்கு பொருளுதவி செய்ய விரும்பிய விஜயநகரத்து அரசன் பொருளுதவி பெற்றிட சுவாமி தேசிகனுக்கு பத்திரிக்கை அனுப்பினார். அதற்கு ஸ்வாமி தேசிகன் தனது வைராகியத்தை விளக்கும் படியாக **க்ஷோணீ கோண** என்ற ஸ்லோகத்தை வித்யாயரண்யர் வழியாக விஜயநகர மன்னருக்கு அனுப்பினார். ஆயினும் ஸ்வாமி எழுந்தருளியே ஆக வேண்டும் என்று விஜயநகர மன்னன் வற்புறுத்தவே, ஸ்வாமி தேசிகன் விஜயநகர மன்னருக்கு தனது வைராகியத்தையும் தனது பட்டற்ற உறுதியையும் விளக்கவே, மேலும் ஐந்து ஸ்லோகத்தை செய்து விடுத்தார். அந்த ஸ்லோகத்தை உணர்ந்த வித்யாயரண்யர், ஸ்வாமியின் வைராகியத்தை கண்டு வியந்தே போனார்.

முதல் ஸ்லோகம்

க்ஷோணீ கோண சதாம்ச பாலந கலா து³ர்வார க³ர்வாநல
க்ஷூப்யத் க்ஷுத்³ர நரேந்த்³ர சாடு ரசநா த⁴ந்யாந் ந மந்யாமஹே ।
தே³வம் ஸேவிது³மேவ நிச்சிநுமஹே யோ௰ஸௌ த³யாளு: புரா
தா⁴நா முஷ்டி முசே குசேல முநயே த³த்தே ஸ்ம வித்தேசதாம் ॥

பூமியை ஆளும் பூபதியும் முழு பூமியையும் ஆள்பவன் இல்லை. அவ்வாறு மன்னர்கள் ஆனாலும் சிறு குரு நிலங்களையே ஆள முடிகின்றது.ஆனால் அவர்களுக்கு செருக்கு அதிகம்.அந்த செருக்கு அளவில்லா காட்டுத்தீபோல் வளர்கிறது ஆகையால் அவர்களுக்கு மதி கலங்குகிறது. இதற்கு காரணம் மக்களின் புகழ்ச்சியே. அத்தகைய அரசர்கள் நாட்டு மக்களையும் மற்றவர்களையும் சற்று இறக்கியே பார்ப்பார்கள். அப்பேர்ப்பட்ட கொள்கை கொண்டுள்ள அரசர்களை நாம் ஒரு பொருளாக கருத மாட்டோம் என்பது நம் கொள்கை. எம் பெருமானை புகழ்ந்தால் அவன் எல்லையற்ற செல்வத்தை கொடுப்பான்.

குசேலன் கிருஷ்ணனிடம் காட்டியது தனது அன்புமிக்க பக்தியை ஆகையால் அவன் கொடுத்தது சிறு அவுளே ஆனாலும் அவனுக்கு கிடைத்தது பெரும் செல்வம் குபேர செல்வம்.ஆகையால் எம்பெருமானை வணங்கினாலே நமக்கு வேண்டிய செல்வம் வேண்டாமலேயே கிடைக்கும். ஆகையால் இவனிடம் எந்தச் செல்வத்தையும் கேட்டுப் பெற விரும்ப மாட்டோம்.

பின்வரும் ஐந்து சுலோகங்களில்:

**முதல்** ஸ்லோகத்தில்: நல்ல ஞானம் பெற்றவர்களே அரசனை போற்றி புகழ்ந்து கெட்டுப் போகின்றார்களே என்று பரிதாபபட்டும்,

**இரண்டாம்** ஸ்லோகத்தில்: மலரும் மலர்களின் வாசனை பெருமாளுக்கே என்பது போல் நமது ஞானமும் மாநிடர்களுக்கு அல்ல பெருமாளுக்கே என்பதை உணர்த்தியும்,

**மூன்றாவது** ஸ்லோகத்தில்: உலகம் என்ற அர்ஜுனனை கண்ணன் என்கிற தேரோட்டி தீய வழியில் செல்ல விடாது காத்தது போல், நம்மையும் காப்பவன் கண்ணன்.நாம் ஏன் வேறு செல்வத்தை நாட வேண்டும்௰ என்பதை உணர்த்தி.

**நான்காவது** ஸ்லோகத்தில்: 11 விதமான தனத்தை உணர்த்துகிறார்.

01) ஜாடராக்னி என்கிற **தனம்**, 02) தணிப்பதான **தனம்**, 03) செல்வம் என்னும் **தனம்**, 04) அழிவது என்னும் **தனம்**, 05) தொழும் **தனம்**, 06) பயனற்ற **தனம்**, 07) உலகமான அர்ஜுனன் என்னும் **தனம்**, 08) மேன்மையான **தனம்**, 09)மலையே ஆன கோவர்**தனம்**, 10) நல்ல மனசுள்ள என்னும் **தனம்**, 11) மகிழ்ச்சியான **தனம்**, இவையே அழிக்க முடியாத உண்மையான தனம் என்று உரைத்தும் ,

**ஐந்தாவது** ஸ்லோகமான

நாஸ்தி பித்ரார்ஜிதம் கிஞ்சித் ந மயா கிஞ்சி தா³ர்ஜிதம்
அஸ்தி மே ஹஸ்திசைலாக்3ரே வஸ்து பைதாமஹம் த⁴நம்.

எனது தந்தையால் அல்லது என்னால் சம்பாதிக்கப்பட்டது எதுவும் இல்லை எனது பாட்டனான பிரம்மன் சம்பாதித்த செல்வமான வரதனே எனக்கு செல்வம் என்று உணர்த்துகிறார் சுவாமி தேசிகன்.

ஆகையால் லௌகிக வாழ்க்கையில் பட்டற்று இருக்க சுவாமி தேசிகன் நமக்கு உணர்த்திய வழியில் வைராக்கியத்துடன் இருந்து நாமும் குறையா செல்வமான எம்பெருமானின் திருப்பாதங்களில் பகவன்நாமா என்னும் பூக்களால் பக்தியுடன் அர்ச்சித்து பகவானையே அடைவோம் .

# உத்ஸவத்தின் மகிமை

'உத்ஸவம்' என்கிற சொல்லிற்குச் சான்றோர் மூன்று விதங்களில் பொருள் கூறுவர் : (1) பகவானுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது. (உத்ஸூதே ஹர்ஷம் இதிச தஸ்மாதே$^{3}$வ மஹோத்ஸவ: மஹாப்ரீதிர் யேந உத்ஸவேந ப$^{4}$விஷ்யதி), (2) மற்ற நாட்களைவிட இந்நாள் உயர்ந்தது (உத்க்ருஷ்டோஅயம் யத: தஸ்மாத் உத்ஸவஸ்த்விதி கீர்த்யதே), (3) ஜனங்களின் கஷ்டங்களைப் போக்கடிக்கிறது (ஸவ இத்யுச்யதே து: கம் வித்$^{3}$வத்$^{3}$பி$^{4}$: ஸமுதா$^{3}$ரஹ்ருதம்। உத்$^{3}$க$^{3}$த: ஸஸவோ யஸ்மாத் தஸ்மாத் உத்ஸவ உத்யதே ॥). ஆகவே, கோவில்கள் எங்கெல்லாம் உள்ளனவோ, அங்கெல்லாம் பகவத் ப்ரீதிக்காகவும் மக்களின் நன்மைக்காகவும் உத்ஸவங்கள் கொண்டாடப்படவேண்டும். மற்றும் உத்ஸவ காலங்களில் தீண்டாமை முதலிய பாகுபாடுகள் கூடாது என்றும் சாஸ்த்ரம் கூறுகிறது (தஸ்மாத் அஸ்ப்ருஶ்யஸ் பர்ஶம் ந தோ$^{3}$ஷாய ப$^{4}$வேத்)

## க்ருதஜ்ஞதை

சோபகிருது வருடத்தின் சிறப்பை எமக்களித்துதவிய மணப்பாக்கம் ஈயுண்ணி **ஸ்ரீ கேசவன் (ராஜப்பா) ஐயக்கார்** அவர்களுக்கும், **Dr. D. ஸ்ரீநிவாசன்**, சென்னை–62 இந்த கோயில் தேஸிக திவ்ய பாதுகா இலவசமாக பிரிண்ட் செய்து வெளிவருவதற்கு காரணமாக இருக்கும் மணப்பாக்கம் குஞ்சப்பூர் கோமான் **ஸ்ரீ V. ரங்கராஜன்,** ஒசூர் அவர்களுக்கும் எங்கள் க்ருதஜ்ஞதையைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**– ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள் கைங்கர்ய ஸபா**

# சோபகிருது (2023-2024) வருடத்திய (நடத்த உத்தேசித்துள்ள) உத்ஸவங்கள்

## சித்திரை மாதம் : ஏப்ரல் - மே 2023

| தமிழ் தேதி | ஆங்கில தேதி | கிழமை | திதி | நக்ஷத்ரம் | உத்ஸவ விவரம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | 14.04.2023 | வெள்ளி | நவமி | உத்திராடம்/ திருவோணம் | சித்திரை வருட பிறப்பு விஷு புண்யகாலம் | மணப்பாக்கம் குஞ்சப்பூர் கோமான் (லேட்) ஸ்ரீ M.R. விஜயராகவன் வாரிசுகள் ஒசூர், Ph : 90477 66000 |
| 12 | 25.04.2023 | செவ்வாய் | பஞ்சமி | திருவாதிரை | ஸ்ரீ பாஷ்யகாரர் ஸ்ரீ ராமாநுஜர் ஜெயந்தி (திருமஞ்ஜனம்) | யாகபுரம் ஸ்ரீ R.கோவிந்தராஜ ஐயங்கார், வேளச்சேரி, சென்னை. செல் : 98402 87029 |
| 19 | 02.05.2023 | செவ்வாய் | துவாதஸி | உத்திரம் | பழைய ஸம்ப்ரோக்ஷண தினம்–திருமஞ்ஜனம் | ஆக்கூர் சேட்லூர் ஸ்ரீ ஸ்ரீதராச்சாரியார் நங்கைநல்லூர். செல் : 99419 30632 |
| 21 | 04.05.2023 | துவாதசி | சதுர்தசி | சித்திரை | ஸ்ரீ நரஸிம்ஹஜெயந்தி | ஸ்ரீரவி சேஷாத்ரி, பாடி, செல் : 94440 28595 |
| 23 | 06.05.2023 | சனி | ப்ரதமை | விசாகம் | திருமஞ்ஜனம் அர்ச்சனை | ஸ்வச்சன்னம் D. ரங்கசாமி, வளசரவாக்கம். ஸ்ரீ G. மாதவாச்சார், சிகிந்த்ராபாத், செல் : 9246578936 |
| 29 | 12.05.2023 | வெள்ளி | ஸப்தமி | திருவோணம் | ஸ்ரீ தேஸிகன் திருமஞ்ஜனம் | மணப்பாக்கம் ஈயுண்ணி (லேட்) ஸ்ரீ M.S. ராஜகோபால ஐயங்கார், மைலாப்பூர் போன் : 24994503 |

வருஷப் பிறப்பு சித்திரை 01, (14.04.2023) : ஸ்ரீ சோபகிருது வருஷ பலன்

**ஸ்ரீ ராமானுஜர் (உடையவர்) திருநஷத்ரம் சித்திரை 12, (25.04.2023) :** ஸ்ரீ ராமானுஜர் ஸ்ரீ ஆளவந்தாருக்குப்பின் தோன்றி ஆசார்யர், ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தை நம் நாட்டில் நிலை நாட்டியதால் இந்த ஸித்தாந்தம். ''ராமானுஜ தர்ஸனம்'' எனவும் ''விசிஷ்டாத்வைதம்'' எனவும் பெயர் பெற்று விளங்குகிறது. இவர் காலத்திலிருந்து விஷ்ணுவே முழுமுதற்கடவுள் என்கிறகருத்து பல இடங்களில் பரவி, மத்வாசார்யர், இராமானந்தர், வல்லபாசார்யர், சைதன்ய மஹாப்ரபு, நிம்பார்கள், ஸ்வாமி நாராயணன் ஆகிய பல ஆசார்யர்கள் தங்கள் தங்கள் ஸித்தாந்தங்களை ஸ்தாபித்துள்ளனர். ஸ்ரீ இராமானுஜரின் 1000–வது அவதார தினம் 2017ல் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

**ஸம்ப்ரோக்ஷண தினம் சித்திரை 19 (02.05.2023)** : கோயிலில் முக்கிய விக்ரஹத்தைப் பிரதிஷ்டை செய்த தினத்தின் ஆண்டு விழாவாக இன்றைய தினம் கொண்டாடப்படுகிறது. பெருமாளும் மற்றும் உள்ள தெய்வங்களும் திருமஞ்ஜனம் கண்டருள்வர். (திருமஞ்ஜனத்தைப்பற்றின விவரங்களை ஆனி மாதக் குறிப்புகளில் காணலாம்.)

**ஸ்ரீ ந்ருஸிம்ஹ ஜெயந்தி சித்திரை 21 (04.05.2023)**

தமது பக்தன் பிரஹலாதன் பகவான் துரும்பிலும் உள்ளான் தூணிலும் உள்ளான் என்று கூறியதை நிரூபிப்பதற்காக, அவனுடைய தந்தை ஹிரண்யகசிபுவின் முஷ்டியினால் தாக்கப்பட்ட தூணிலிருந்து பகவான் சிங்கத்தின் தலையுடனும் மனித உடலுடனும் வெளிப்பட்டுத் தம்மை எதிர்க்க வந்த அரக்கனை மாய்த்தார். இந்த ந்ருஸிமஹ அவதாரம் பகவானின் தசாவதாரங்களில் ஒன்றாகும். இன்றைய தினம் பகலில் உபவாஸம் இருந்து சாயங்கால அந்திவேளையில் தீர்த்தமாடிவிட்டுப் பகவானைப் பெரியோர் வழிபடுவர். பகவானின் அவதார வைபவமும், ஹிரண்ய கசிபுவை அழித்தபின் ப்ரஹ்மா, சிவன், தேவர்கள், பிரஹ்லாதன் முதலியோர் அவரை ஸ்தோத்ரம் செய்த முறைகளையும் ஸ்ரீமத் பாகவதம் 7-வது ஸகந்தம் 8,9 அத்யாயங்களில் காணலாம்.

# சோபகிருது (2023-2024) வருடத்திய (நடத்த உத்தேசித்துள்ள) உத்ஸவங்கள்

## வைகாசி மாதம் : மே - ஜூன் 2023

| தமிழ் தேதி | ஆங்கில தேதி | கிழமை | திதி | நக்ஷத்ரம் | உத்ஸவ விவரம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| 07 | 21.05.2023 | ஞாயிறு | துவிதியை | ரோகிணி | **வஸந்த உத்ஸவம்** | க்ராமவாஸிகள், ஸேவார்த்திகள் மற்றும் பலர். |
| 09 | 23.05.2023 | செவ்வாய் | சப்தமி | திருவாதிரை | **ஸ்ரீமுஷ்ணம் ஆண்டவன் திருநக்ஷத்ரம் / அர்ச்சனை** | டாக்டர் கோபாலன் & டாக்டர் அருணா நங்கநல்லூர். Ph : 96770 43405 |
| 19 | 02.06.2023 | வெள்ளி | துவாதசி | விசாகம் | **ஸ்ரீ நம்மாழ்வார் திருநக்ஷத்ரம்** | வடக்குப்பட்டு ஸ்ரீ ஸ்ரீதராச்சார் (கொரட்டூர்) மற்றும் மணப்பாக்கம் ஸ்வச்சன்னம் ஸ்ரீ M.R.Seshadri-யின் குமாரர் ஸ்ரீ S.Rajan (உள்ளகரம்) Ph:98400 59682 |
| 25 | 08.06.2023 | வியாழன் | பஞ்சமி | ஸ்ரவணம் | **ஸ்ரீ தேஸிகன் திருமஞ்ஜனம்** | ஸ்ரீ பார்த்தசாரதி ஐயங்கார், ஸ்ரீரங்கம். Ph:99941 72986 |

**வஸந்த உத்ஸவம் வைகாசி 07 (21.05.2023)**

ஆலயங்களில் ஒவ்வொரு வருஷமும் வைகாசி மாதத்தில் (வஸந்த ருது) நடைபெறும் உத்ஸவம் "வஸந்த உத்ஸவம்". கோடை காலம் முடிந்து வரும் நாட்கள் (வைகாசியில்) **வஸந்த காலம்** எனக் கூறுவர். இம்மாதத்தில்தான் நல்ல வாஸனை மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன. சந்தனம் போன்ற வாஸனாதி திரவியங்களையும் நல்ல வாசனை மலர்களையும் திருமேனியில் அணிந்துகொண்டு காட்சி தருகின்றனர் பகவான். இந்த தருணத்தில் எல்லா ஜீவராசிகளுக்கும், மனம் குளிர்ந்து அவரவர்களின் வேண்டுதல்களுக்கு ஏற்றபடி கருணையுடன் அருளை வழங்குகின்றார் என்று போற்றப்படுகின்றது. ஆகையால் எல்லோரும் இந்த உத்ஸவத்தில் பகவானைப் போற்றி வணங்கினால் எக்காரியமும் ஈடேறும் என்பது திண்ணமே.

**ஸ்ரீ நம்மாழ்வார் திருநக்ஷத்ரம் வைகாசி 19 (02.06.2023)**

ஆழ்வார்கள் அனைவரும் ஸ்ரீ வைகுண்டத்திலேயே வாழும் நித்ய ஸூரிகளின் அவதாரங்கள் என்கிறார் ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன். நம்மாழ்வார் விஷ்வக்ஸேனரின் அவதாரம். இவரைச் சடகோபர் என்றும் கூறுவர். இவர் அருளிச்செய்த திவ்யப்ரபந்தங்கள் **திருவாய்மொழி** (1102 பாசுரங்கள்), **திருவிருத்தம்** (100), **திருவாசிரியம்** (7), **பெரிய திருவந்தாதி** (87) எனப்படும். இவை நான்கும் நான்கு வேதங்களுக்கு ஸமானமாகும். பகவானிடம் சரணாகதி செய்து மோஷம் பெறலாம் என்கிற கருத்தை வெளியிட்டதனால் இவரைப் "பிரபந்த ஜன கூடஸ்தர்" என்றும் அழைப்பர்

# சோபகிருது (2023-2024) வருடத்திய (நடத்த உத்தேசித்துள்ள) உத்ஸவங்கள்

## ஆனி மாதம் : ஜூன் - ஜூலை 2023

| தமிழ் தேதி | ஆங்கில தேதி | கிழமை | திதி | நக்ஷத்ரம் | உத்ஸவ விவரம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| 11 | 26.06.2023 | திங்கள் | அஷ்டமி | உத்திரம்/ ஹஸ்தம் | **ஆனி திருமஞ்ஜனம்** | யாகபுரம் ஸ்ரீ R.கோவிந்தராஜ ஐயங்கார், வேளச்சேரி, சென்னை. Ph:98402 87029 |
| 13 | 28.06.2023 | புதன் | தசமி | சித்திரை | **சக்கரத்தாழ்வார் திருமஞ்ஜனம்** | **V. ராமன்,** திண்டுக்கல் செல் : **83441 42992** |
| 14 | 29.06.2023 | வியாழன் | ஏகாதசி | ஸ்வாதி | **ஆனி கருடன் திருமஞ்ஜனம்** | மணப்பாக்கம் குஞ்சப்பூர் கோமான் (லேட்) ஸ்ரீ ஸ்ரீனிவாஸாச்சாரியார் தௌஹித்ரன் ஸ்ரீ ராஜன், பெருங்களத்தூர் Ph : 94440 53431 |
| 15 | 30.06.2023 | வெள்ளி | த்வாதசி | விசாகம் | **திருமஞ்சனம் அர்ச்சனை** | **கோமான் ஸ்ரீ ஸ்ரீநிவாஸன்,** செங்கல்பட்டு Sri G. மாதவாச்சார், சிகிந்த்ராபாத். |
| 20 | 05.07.2023 | புதன் | த்விதியை | ஸ்ரவணம் | **ஸ்ரீதேஸிகன் திருமஞ்சனம்** | மணப்பாக்கம் (திருக்கோஷ்டியூர்) ஸ்ரீ M.S.ஸ்ரீநிவாஸாச்சாரியார், மேற்கு மாம்பலம், சென்னை—33. Ph : 97908 02523 |
| 24 | 09.07.2023 | ஞாயிறு | சப்தமி | உததிரட்டாதி | **தவனோத்ஸவம்** | மணப்பாக்கம் குஞ்சப்பூர் கோமான் ஸ்ரீதராச்சாரியார், வில்லிவாக்கம் செல் : **9840571125** |

**ஆனி கருடன் ஆனி 14 (29.06.2022)**
ஸ்ரீ வைகுண்டத்தில் எம்பெருமானுக்கு நித்யகைங்கர்யம் செய்யும் முக்யமான நித்ய ஸூரிகளில் ஒருவர் கருடாழ்வார். அவரை வேதங்களின் ஆத்மா **(வேதாத்மா விஹகே³ஶ்வர:)** என்று தமது சது: ஸ்லோகீ(1)ல் ஸ்ரீ ஆளவந்தார் கூறுகிறார். பகவானுக்கு வாஹனமாகவும், த்வஜம் (கொடி) ஆகவும் கைங்கர்யம் செய்யும் இவர். பகவான் ஸ்ரீ ராமாவதாரம் எடுத்து லங்கையில் யுத்தத்தின் பொழுது இந்த்ரஜித்தினுடைய நாகபாசத்தால் கட்டுண்டு கிடக்கையில், கருடாழ்வார் தோன்றி இராமலக்ஷ்மணர்களை நாகங்களின் பிடிப்பிலிருந்து விடுவித்தார். கோயில்களில் கொண்டாடப்படும் உத்ஸவங்களில் கருடஸேவை மிகவும் முக்கியமானது. கஜேந்திரனைக் காப்பாற்ற, கருடன் மேலேறி பறந்தோடி வந்ததுபோல் பகவான் நம்மையும் காப்பாற்றுவார் என்பதைத் தோற்றுவிக்கிறது. ஸ்ரீமந்நாராயணனே பரதத்வம் என்பதை அரச ஸபையில் ஸ்தாபித்த ஸ்ரீ பெரியாழ்வாரை யானை மேலேற்றி வீதி ஊர்வலமாக அழைத்து வரும்பொழுது, பகவான் கருடாரூடனாய் ஆகாயத்தில் தோன்றி ஆழ்வாரை அனுக்ரஹித்தார். அப்பொழுது தான் பெரியாழ்வார் திருப்பல்லாண்டுப் பாடினார் என்று வரலாறு.

**ஆனித் திருமஞ்ஜனம் ஆனி 11 (26.06.2023)**
ஆகம சாஸ்த்ரங்களின்படி பகவானுக்குத் திருமஞ்ஜனம் (வடமொழியில் ஸ்நபனம்) செய்வது ஒரு விசேஷ உத்ஸவமாகும். குறிப்பிட்ட உலோகங்களினாலோ, புனிதமான மண்ணினாலோ செய்யப்பட்ட கலசங்களில், சுத்த ஜலம், பஞ்சகவ்யம், தேன் முதலியவைகளைக் கொண்டு பகவானுக்கு (மூலவர், உற்சவமூர்த்திகள் இருவருக்கும்) வேத மந்த்ரங்களை உச்சாடனம் செய்து கொண்டு ஆகமங்களில் கூறிய முறைகளில் திருமஞ்ஜனம் செய்வர். ஸாதாரணமாக 108 கலசத் திருமஞ்ஜனங்கள் நடைபெறும். சில விசேஷக் காலங்களில் 1008 கலசத் திருமஞ்ஜனங்களும் செய்யப்படும். இத்திருமஞ்ஜனங்களுக்கு உபயம் செய்வோர்களுக்கு ஸகல ஸௌபாக்யங்களும் ஏற்படும் என்று நூல்கள் கூறுகின்றன.

# சோபகிருது (2023-2024) வருடத்திய (நடத்த உத்தேசித்துள்ள) உத்ஸவங்கள்

## ஆடி மாதம் : ஜூலை - ஆகஸ்டு 2023

| தமிழ் தேதி | ஆங்கில தேதி | கிழமை | திதி | நக்ஷத்ரம் | உத்ஸவ விவரம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | 17.07.2023 | திங்கள் | அமாவாசை | புனர்வசு | **ஆடிப்பண்டிகை திருமஞ்ஜனம்** | குஞ்சப்பூர் கோமான் ஸ்ரீ சம்பத் குமாராச்சாரியார் வாரிசுகள் மணப்பாக்கம், Ph : 98655 64311 |
| 06 | 22.07.2023 | சனி | சதுர்த்தி/ பஞ்சமி | பூரம் | **திருவாடிப்பூரம், ஸ்ரீ ஆண்டாள் திருநக்ஷத்ரம், திருமஞ்ஜனம்** | ஸ்ரீமதி S.வைஜெயந்தி மணப்பாக்கம். Ph : 70948 91429 |
| 11 | 27.07.2023 | வியாழன் | நவமி | விசாகம் | **திருமஞ்ஜனம்**<br>**அர்ச்சனை** | ஸ்ரீ V. ரங்கன், மேற்கு மாம்பலம்<br>ஸ்ரீ G. மாதவாச்சாரி, செகந்திராபாத் Ph : 98405 71125 |
| 17 | 02.08.2023 | புதன் | பிரதமை | திருவோணம் | **ஸ்ரீதேஸிகன் திருமஞ்சனம்** | காயார் மெய்யூர் ஸ்ரீ R. நரசிம்மன் (ஸ்) பாலாஜி நங்கநல்லூர், Ph : 9677051470 |

**ஆடிப பணடிகை 01 (17.07.2023)**

இன்றைய தினம் சூர்ய பகவான் கடக ராசியில் பிரவேசிக்கிறார். தக்ஷிணாயன புண்யகாலம் ஆரம்பமாகிறது.

**திருவாடிப்பூரம் ஆடி 06 (22.07.2023)**

பூமிப்பிராட்டியின் அம்சமாக அவதரித்த ஆண்டாளைப் பெரியாழ்வார் தமது தோட்டத்தில் கண்டெடுத்த தினம். இக்காரணத்தினால் இவளுக்கு "கோதா" என்கிற திருநாமம் ஏற்பட்டது. ஆழ்வார்களுள் ஒரே பெண்மணி. "மானிடவர்க்கென்று பேச்சுபடில் வாழகில்லேன்" என்று கூறி எம்பெருமானையே தனது கணவனாக வரித்து ஸ்ரீரங்கநாதனுடன் ஐக்யமான ஆண்டாள் திருப்பாவை (30 பாசுரங்கள்) மற்றும் நாச்சியார் திருமொழி (143 பாசுரங்கள்) அருளியுள்ளார்.இவரைத் துதித்து ஸ்வாமி தேசிஹன் "கோதாஸ்துதி" என்னும் ஒரு ஸ்தோத்ரத்தை அருளியுள்ளார். ஆண்டாளை வழிபடுவோர்க்கு இனிமையான பேச்சும், வாக்குவன்மையும், பகவானிடம் பக்தியும் பெருகும் என்பது அனுபவ ஸித்தம்.

# சோபகிருது (2023-2024) வருடத்திய (நடத்த உத்தேசித்துள்ள) உத்ஸவங்கள்

## ஆவணி மாதம் : ஆகஸ்டு - செப்டம்பர் 2023

| தமிழ் தேதி | ஆங்கில தேதி | கிழமை | திதி | நக்ஷத்ரம் | உத்ஸவ விவரம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| 02<br>03<br>04<br>05 | 19.08.2023<br>20.08.2023<br>21.08.2023<br>22.08.2023 | சனி<br>ஞாயிறு<br>திங்கள்<br>செவ்வாய் | திருதியை | உத்திரம்<br>ஸ்வாதி | ஸ்ரீ பவித்ரோத்ஸவம் | கிராமவாசிகள், ஸேவார்த்திகள் |
| 06 | 23.08.2023 | புதன் | சப்தமி | விசாகம் | திருமஞ்ஜனம் | |
| | | | | | அர்ச்சனை | ஸ்ரீ G. மாதவாச்சார், சிகிந்த்ராபாத்<br>PH : 9246578936 |
| 12 | 29.08.2023 | செவ்வாய் | திரயோதசி | ஸ்ரவணம் | ஸ்ரீ தேஸிகன் திருமஞ்ஜனம் | மணப்பாக்கம் ஸ்வச்சன்னம்<br>ஸ்ரீ ரங்கஸ்வாமி ஐயங்கார் (வளசரவாக்கம்)<br>Ph : 98414 81241 |
| 21 | 07.09.2023 | வியாழன் | அஷ்டமி | ரோஹிணி | பாஞ்சராத்ர ஸ்ரீ ஜயந்தி | மணப்பாக்கம் ஈயுண்ணி<br>ஸ்ரீ V. ரங்காச்சாரி மேற்குமாம்பலம்<br>சென்னை–600 033, செல் : 9444420999 |

**பாஞ்சராத்ர ஸ்ரீ ஜயந்தி ஆவணி 21 (07.09.2023)**

பகவான் கிருஷ்ணாவதாரத்தில் உலகத்தில் உள்ள எல்லா மனிதர்களுக்கும் ஜ்ஞானம் பெறுவதற்கும் மோக்ஷம் செல்வதற்கும் வழியைக் காண்பித்தார். கீதை என்கிற உபதேசத்தை அர்ஜூனன் மூலம் உலகுக்கு அளித்தார். இது அவர் ஸாஸ்வதமாக செய்த உபகாரம். இவ்வதாரத்தைக் கொண்டாடுவது ஒவ்வொருவரின் கடமையாகும். ஸ்ரீஜயந்திக்கு மறுநாள் பகவான் கிருஷ்ணன் குழந்தைப் பருவத்தில் பிருந்தாவனத்தில் கோபிகைகள் வீடுகளுக்குச் சென்று தயிரும் வெண்ணையையும் களவு செய்து உண்டதைக் கொண்டாடும் வண்ணம் "உறியடி" விளையாட்டு நடத்துவது மரபு.

# சோபகிருது (2023-2024) வருடத்திய (நடத்த உத்தேசித்துள்ள) உத்ஸவங்கள்

## புரட்டாசி மாதம் : செப்டம்பர் - அக்டோபர் 2023

| தமிழ் தேதி | ஆங்கில தேதி | கிழமை | திதி | நக்ஷத்ரம் | உத்ஸவ விவரம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| 03 | 20.09.2023 | புதன் | பஞ்சமி | விசாகம் | திருமஞ்ஜனம்/அர்ச்சனை | ஸ்ரீ G. மாதவாச்சார், சிகிந்த்ராபாத் Ph : 9246578936 |
| 08 | 25.09.2023 | திங்கள் | புதன் | ஸ்ரவனம் | ஸ்ரீ தேஸிகன் திருநக்ஷத்ரம் | மணப்பாக்கம் ஸ்வச்சன்னம் (லேட்) ஸ்ரீ தேசிகாச்சாரியார் வாரிசுகள் செல் : 98414 81242 |
| 15 | 01.10.2023 | ஞாயிறு | திருதியை | அஸ்வனி | ஸ்ரீபாதுகா ஸஹஸ்ர பாராயணம் | ஸேவார்த்திகள், கிராமவாசிகள் |
